# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## தேங்காய் விற்பனைக்கான கேள்வி விலை மனுக்கோரல்

(SEUSL/GA/IFQ/CP/2021/03)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக தென்னந்தோட்டத்தில் காணப்படும் தேங்காய்களை விற்பனை செய்வதற்கான கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன.

தேங்காய்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மரங்களிலுள்ள தேங்காய்களை தனது சொந்த செலவிலும் தனது பணியாட்களை பயன்படுத்தியும் பறிப்பதற்கும், குறிப்பிட்ட இடத்தில் சேகரிப்பதற்கும் தயாராக இருத்தல் வேண்டும் என்பதுடன் முதலில் ஏறு மரங்களில் தேங்காய்களை பறித்த பின்னரே ஏனைய மரங்களில் தேங்காய்களை பறித்தல் வேண்டும். சேகரிக்கப்பட்ட தேங்காய்கள், பல்கலைக்கழக மேற்பார்வையாளர்களின் முன்னிலையில் கணக்கிடப்பட்டு அதற்கான பணத்தினை செலுத்திய பின்னர் வெளியில் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும். இவ்வாறு பறித்து, **சேகரிக்கப்பட்ட ஒரு தேங்காயின் ஆகக்குறைந்த விலை ரூபா. 48.00 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.** (தேங்காய்களை பெரியது சிறியது என வேறுபடுத்த இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் மொத்தமாக பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையில் 5% புச்சி மற்றும் சிறிய தேங்காய்களுக்காக கழிக்கப்படும்)

இதற்கான விண்ணப்பப்படிவத்தினை பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **1,000.00** மும் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புக்கட்டணமாக ரூபா. **5,000.00** யினையும் பல்கலைக்கழக மக்கள் வங்கி, அட்டாளைச்சேனை கணக்கிலக்கம் **228-1001-9000-1704** இற்கு மக்கள் வங்கியின் ஏதேனும் ஒரு கிளையில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டை பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்க வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையும் மேற்கூறப்பட்ட ரூபா **6,000/-** பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் மூடிய கடித உறையிலிட்டு பிரதான நுழைவாயிலில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் **15.09.2021ம் திகதி பி.ப. 2.45 மணிக்கு** முன்னர் இடல் வேண்டும். **15.09.2021ம்** திகதி பிற்பகல் 03.00 மணிக்கு விலைமனுக்கள் உடைக்கப்பட்டு ஆகக்கூடிய கேள்விதாரருக்கு தேங்காய் பறிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு **16.09.2021 ம்** திகதி தொடக்கம் **20.09.2021 ம்** திகதி வரை தேங்காய் பறிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். பறிக்கப்பட்ட அனைத்து தேங்காய்களையும் அதற்கான கொடுப்பணவு முழுவதையும் மேற்கூறப்பட்ட வங்கிச் கணக்கில் செலுத்தி **21.09.2021ம்** திகதி பி.ப 05.30 மணிக்கு முன்னராக வளாகத்தை விட்டு எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதிப் பதிவாளர், பொது நிர்வாகம் (0776163298) அல்லது பல்கலைக்கழக கியுரேட்டர் (0777561644) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக்கழகத்துக்கு பூரண உரிமை உண்டு என்பதை கவனத்திற் கொள்க.

**பதிவாளர்**
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்